

# அலகு 2

# எளியது

## மாணவர் கையேடு


01

# இயேசுவைப்போல் பராமரித்தல்

**வேதாகம கதை: 4000 பேரை போஷித்தல்**
**மத்தேயு 15:29-38**


## மனன வசனம்

யாக்கோபு 2:15-16 "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, 16உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?"



## வீட்டுப்பாடம்

உங்களுடைய பள்ளியிலிருந்து அல்லது அயலகத்தாரிடமிருந்து ஒரு தேவையிலுள்ள வகுப்பு நண்பனை தெரிந்துகொள்ளுங்கள். அது ஆதரிக்கக்கூடியதானால், அவனுக்கு பழங்களையும், தானியங்களையும், அல்லது சாப்பிடுவதற்கு எதையாகிலும் அவனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் போதுமானதாயிருக்கும்படிக்கு, கொண்டுவரும்படி உங்களுடைய பெற்றோர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். உபரி உணவையும் பகிர்ந்துகொள்ளும்படிக்கு உங்களுடன் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய பள்ளியில் தூய்மைசெய்யும் பணியை செய்துகொண்டிருக்கும் நபரிடம்கூட நீங்கள் இதை செய்யலாம் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.



படத்திற்கு வண்ணமிடுதல்

# 02 எல்லாருக்கும் இலவசமானது

**வேதாகம கதை: கிணற்றின் அருகே இருந்த பெண்**
**யோவான் 4:4-15**

## படத்திற்கு வண்ணமிடுதல்



உங்களுடைய பள்ளி வகுப்பறையி லுள்ள அல்லது குடிபெயர்ந்த அல்லது மற்றொரு மார்க்கத்தைச் சார்ந்த பிரச்சனைக்குரிய சிறுவனிடம் சேருங்கள். தவறான எண்ணம் உங்களை ஆளுகைசெய்ய இடங்கொடாதிருங்கள். காலையில் ஒரு வாழ்த்துதலை கொடுங்கள் அல்லது அவனுடைய நாள் எப்படிப்பட்டதென்று விசாரியுங்கள். நீங்கள் விருப்பப்பட்டால், உங்களுடை ய சில உணவை பகிர்ந்துகொள்ளுங் கள். அவர்களுடைய பிரதி வெளிப்பா டு எதிர்மறையாக இருந்தா ல் ஆச்சரியப்படாதிருங்கள். வாரம் முழுவதும் இதை கடைபிடியுங்கள். பிறகு நடந்ததைக் குறித்து உங்கள் ஞாயிறுப் பள்ளி ஆசிரியரிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்."

## வீட்டுப்பாடம்

## மனன வசனம்

ரோமர் 12:16 " ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்."

03

# எல்லாவற்றையும் மதிப்புடையதாக எண்ணுங்கள்

**வேதாகம கதை: ஒரு ஐசுவரியவனான வாலிப வயதுள்ள அதிபதி**

மாற்கு 10:17-27

## வீட்டுப்பாடம்

உங்களுடைய ஒரு பொம்மைகளுள் ஒன்றை அல்லது அல்லது நீங்கள் மிகவும் அவசியமாய் கருதும் காரியத்தை தெரிவுசெய்யுங்கள் (நீங்கள் உண்மையாகவே செய்யவிரும்பினால் மாத்திரம்). அதை அநேக பொம்மைகளை கொண்டி ருக்காதவரிடம் கொடுத்துவிடுங்கள். இந்த வாரத் தில் இதை செய்ய உங்களுக்கு கடினமாகத் தோன்றினால், அடுத்த வாரத்தில் செய்யுங்கள். நீங்கள் செய்துமுடித்தப்பிறகு, உங்களுடை ய ஞாயிறுப் பள்ளியுடன் இதைக் குறித்து பகிர்ந்துகொள்ளுங்கள். இது உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?

## படத்திற்கு வண்ணமிடுதல்




மாற்கு 8:35 " தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்."


## மனன வசனம்

# 04 இயேசுவினுடைய உபதேசங்களை பின்பற்றுதல்

**வேதாகம கதை: இயேசு 10 குஷ்டரோகிகளை குணமாக்குதல்`**
**லூக்கா 17:11-19**



## படத்திற்கு வண்ணமிடுதல்



## மனன வசனம்

பிலிப்பியர் 4:6 " நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."



## வீட்டுப்பாடம்

தேவனிடத்திலிருந்து நீங்கள் வேண்டியிருக்கும் காரியங்களையும், இந்த வாரத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட காரியங்களையும் நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கேட்டவைகளுக்கு உங்கள் குடும்பத்திற்காகவோ அல்லது உங்களுடைய சொந்த வாழ்விலோ அவர் பதிலளித்திருந்தால், தேவனுக்கு நன்றிசெலுத்த சில சமயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பிறகு இதனைக் குறித்து ஞாயிறுப்பள்ளி ஆசிரியரிடம் கூறுங்கள்.

# 05 இயேசுவைப்போல் தாழ்மையாயிருங்கள்


**வேதாகம கதை: இயேசு தம்முடைய சீஷர்களின் பாதங்களை கழுவுதல் யோவான் 13:3-17**



படத்திற்கு வண்ணமிடுதல்

## வீட்டுப்பாடம்

உங்களுடைய வீட்டிலுள்ள அல்லது பள்ளியிலுள்ள ஒரு நபருக்காக வேலைகளை செய்யுங்கள். அவர்களுக்கு உதவும் வகையில் அவர்கள் உதவி கேட்பதற்கு முன்பே உதவுங்கள். பள்ளியில், நீங்கள் எப்போதுமே செய்யாத வேலையான, அறையிலிருந்து குப்பைகளை அகற்றுங்கள்.



## மனன வசனம்

பிலிப்பியர் 2:3-4 " ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக."

# இயேசுவைப்போல் செயலார்வமுடையவராயிருங்கள்

வேதாகம கதை: இயேசு மேசைகளை கவிழ்த்துவிடுதல் மாற்கு 11:15-17 (யோவான் 2:13-17)

## படத்திற்கு வண்ணமிடுதல்



## மனன வசனம்

மத்தேயு 23:13 “மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை."

## வீட்டுப்பாடம்


தேவனுடனேயுள்ள உங்கள் அன்பைக் காட்டிலும் மேலான ஜனங்கள் அல்லது பொருட்களைக் குறித்தான ஒரு பட்டியலை உண்டாக்குக. ஒருவேளை தேவனுக்கான உங்களது ஈடுபாட்டை இழக்கச்செய்த காரியங்கள் (பெண்நண்பர்கள் அல்லது ஆண்நண்பர்கள், பள்ளிவேலைகள், தொலைபேசிகள், விளையாட்டுகள், பொம்மைகள், நண்பர்கள்). அவருடைய கண்களுடன் பார்க்கும்படிக்கு தேவன் உங்களுக்கு போதிக்கும்படிக்கு அவரை கேட்டுக்கொள்ளுங்கள். மேலும், இந்த வாரத்தில் தேவனோடு பேசுவதற்கு அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்

07

# இயேசுவினுடைய இருதயம் வெளிப்படுதல்

**வேதாகம கதை: கெத்சமெனே தோட்டம்**

**மத்தேயு 26:36-39, 47-54**



## மனன வசனம்

லூக்கா 6:27 " "எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்."



## வீட்டுப்பாடம்

இந்த வாரத்தில் யாராவது அநீதியாக உங்களை அவமதித்திருந்தால், ஏமாற்றியிருந்தால் அல்லது திட்டியிருந்தால், சண்டைப்பண்ணாதிருங்கள். நிலைத்திருங்கள், அவர்களுக்காக ஜெபியுங்கள், தேவன் உங்களுக்கு சமாதானத்தை தந்தருளும்படிக்கு கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் உணர்ந்துகொண்ட விதத்தை, உங்களுடைய ஞாயிறுப்பள்ளி ஆசிரியர்களிடம் பேசுங்கள்.

படத்திற்கு வண்ணமிடுதல்

# அநீதி!

**வேதாகம கதை: இயேசு பாடுபடுதல்**
**மாற்கு 14:57-65, 15:1-15**

## மனன வசனம்

ஏசாயா 53:9 "
துன்மார்க்கரோடே
அவருடைய பிரேதக்குழியை
நியமித்தார்கள்; ஆனாலும்
அவர் மரித்தபோது
ஐசுவரியவானோடே
இருந்தார்; அவர் கொடுமை
செய்யவில்லை; அவர் வாயில்
வஞ்சனை இருந்ததுமில்லை."



## படத்திற்கு வண்ணமிடுதல்



## வீட்டுப்பாடம்


அநியாயமாக, யாராவது இந்த வாரத்தில் உங்களை குற்றப்படுத்தியிருந்தால், நீங்கள் உங்களை தற்காத்துக்கொள்ளவேண்டாம். அந்த நபர் தான் தவறுசெய்தார் என உணர்ந்து, ஒப்புரவாகும்படிக்கு தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுங்கள். அவன் அப்படி செய்யாவிட்டால், தேவன் ஒரு நல்ல சமயத்தில் அதைச் செய்வாராக.

# 09 மரணத்தில் ஜீவன்

**வேதாகம கதை: இயேசு சிலுவையிலறையப்படுதல்**
**மத்தேயு 27:27-31, 45-54**



## படத்திற்கு வண்ணமிடுதல்



## வீட்டுப்பாடம்

இயேசு தாம் சிலுவையிலறையப்படுவதை நீங்கள் அறிந்தபோதும், அவர் உங்களுக்கு இரட்சிப்பின் வரத்தை அளிக்கும்போதும் எவ்வாறு உணர்ந்தீர்கள் என்பதைப் பற்றி நீங்கள் உணர்ந்தீர்கள் என்று உங்கள் பெற்றோர்களிடம் அல்லது நீங்கள் மிகவும் நம்புபவர்களிடம் கூறுங்கள்.


## மனன வசனம்

ஏசாயா 53:5 " நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."

# 10 கெட்டவன் இரட்சிக்கப்படுதல்

**வேதாகம கதை: சிலுவையின் மீதிருந்த திருடன்**
**லூக்கா 23:32-33, 39-43**

## படத்திற்கு வண்ணமிடுதல்



## வீட்டுப்பாடம்

தேவனை நீங்கள் நம்புவதற்கு உதவியாயிருக்கும் காரியங்களைப் பட்டியலிடுக. சிலருடைய வாழ்விலிருந்து அதை எடுத்துக்கொள்ளுங்கள். பட்டியலின் கடைசியில் ரோமர் 10:11 வசனத்தை எழுதுக. "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்கிறது."

## மனன வசனம்

ரோமர் 10:11 " அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது."

# கெட்டநாள் நல்ல நாளாக மாறுதல்

**வேதாகம கதை: இயேசுவினுடைய உயிர்த்தெழுதல்**
**மத்தேயு 27:57-61; 28:1-10; லூக்கா 24:36-48**

## படத்திற்கு வண்ணமிடுதல்



### வீட்டுப்பாடம்

இரவு உணவின்போது, சபையில் நடைபெற்ற ஏதாவது ஒரு காரியத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட மிகச்சிறந்த அனுபவத்தை உங்கள் குடும்பத்துடன் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏன் என்றும் விளக்குங்கள்.



### மனன வசனம்

எபிரெயர் 11:1
"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."

# 12 எதிர்பாராத விசுவாசி


**வேதாகம கதை: சவுல் விசுவாசித்தல்**
**அப்போஸ்தலர் 9:1-20**

படத்திற்கு வண்ணமிடுதல்



## மனன வசனம்

அப்போஸ்தலர் 1:8
" பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."




## வீட்டுப்பாடம்

இயேசுவில் நீங்கள் எவ்வாறு விசுவாசமாயிருக்கிறீர்கள் மற்றும் யார் உங்களிடம் அவரைக் குறித்துக் கூறினார் எனவும் வகுப்பிடம் கூறுங்கள். நீங்கள் இயேசுவைக் குறித்து பிரசங்கம்பண்ணினால், நீங்கள் போதகராயிருப்பீர்களா, சுவிசேஷகராயிருப்பீர்களா அல்லது மற்ற ஏதாவதொரு செயலை செய்வீர்களா.

# 13 நானும் வரலாமா?

**வேதாகம கதை: பேதுரு இரட்சிப்பைப் பிரசங்கித்தல்**
**அப்போஸ்தலர் 2:14, 36-40**

## படத்திற்கு வண்ணமிடுதல்




### வீட்டுப்பாடம்

எவரிடமாவது நீங்கள் சமீபத்தில் நீங்கள் பொய்கூறியதாக நினைவுகூர்ந்தால், அந்த நபரிடம் சென்று, மன்னிப் புக்கேளுங்கள்.

### மனன வசனம்

யோவான் 3:16 " தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.


# பல செயல்பாடுகள்!




கால இயந்திரம்



இயந்திர நாய்





# ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருங்கள்.



எபேசியர் 4:32 "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

Time Machine 2
Easy Tamil
11211

www.ChildrenAreImportant.com
pedidos@losninoscuentan.com
México: 01-800-839-1009 01-592-924-9041

சிறுவர்கள் முக்கியமானவர்கள்